


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (17.2.2025) தலைமைச் செயலகத்தில், டாக்டர் எம். சுபஸ்ரீ, தேசிய மருத்துவ அறிவியல் தேர்வு வாரியத்தின் (National Board of Examinations in Medical Sciences) சார்பில் நடத்தப்பட்ட சூப்பர் ஸ்பெஷாலிட்டி நெப்ராலஜி பிரிவில் அகில இந்திய அளவில் முதல் மதிப்பெண் பெற்றதற்காக வழங்கப்பட்ட தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழை காண்பித்து வாழ்த்து பெற்றார். உடன் அவரது தந்தை மோகன சுந்தரம், தாயார் திருமதி மல்லிகா மற்றும் சகோதரர் அருண் விக்னேஷ் ஆகியோர் உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (17.2.2025) தலைமைச் செயலகத்தில், அனைத்து ஆசிரியர், அரக மற்றும் பொதுத்துறை ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநிலத்தலைவர் அ.சு. சரத் அருள்மாரன், பொதுச் செயலாளர் த.குருமூர்த்தி, பொருளாளர் தா.ஜோசப் பாஸ்டர், துணைப் பொதுச் செயலாளர் செ.அருண்குமார், துணைத் தலைவர் ந.ராஜா, மாநில செய்தி தொடர்பாளர் கு.தேவராஜ் ஆகியோர் சந்தித்து தாளவாடி, கடம்பூர் மற்றும் பர்கூர் ஆகிய மலைப்பகுதிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு மலைவாழ்படி மற்றும் குளிர்காலப்படி வழங்கியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.





சென்னை, நுங்கம்பாக்கத்திலுள்ள வள்ளுவர் கோட்டம் புனரமைக்கும் பணிகளை, நேற்று (17.02.2025) பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கள ஆய்வு செய்தார்.ஆய்வின்போது, பொதுப்பணித் துறை அரகச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், பொதுப்பணித் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் எஸ்.மணிவண்ணன், சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் எஸ்.மணிகண்டன், கண்காணிப்புப் பொறியாளர் எஸ்.கார்த்திகேயன், செயற்பொறியாளர் ஜெய்கர் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.2.2025) சென்னை கோபாலபுரத்தில் ரூ.7.79 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் குத்துச் சண்டை மைதானத்தின் கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன். சட்டமன்ற உறுப்பினர் மரு. நா.எழிலன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்!

# ரூ.80 கோடி மதிப்பில் வள்ளுவர் கோட்டம் புனரமைக்கும் பணி!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

*சென்னை, பிப்.18-*

நேற்று (17.02.2025) சென்னை, நுங்கம்பாக்கத்திலுள்ள வள்ளுவர் கோட்டத்தின் புனரமைக்கும் பணிகளை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கள ஆய்வு செய்தார்.

“திருக்குறள்“ என்ற தமிழ் இலக்கியத்தை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் படைத்த “அய்யன் திரு வள்ளுவருக்கு“ ஒரு வரலாற்று நினைவுச் சின்னமாக, வள்ளுவர் கோட்டம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், சென்னை மாநகரில் 5 ஏக்கர் பரப்பளவில் 18.9.1974 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, 1976-ஆம் ஆண்டில் முடிக்கப் பட்டது.

திருவாரூர் ஆழித்தேரை மாதிரி வடிவமாக கொண்டு, பல்லவக் கலை சிற்ப வேலைபாடுகளுடன் கல்தேரும், (உயரம் 128 அடி), காந்தார கலை வடிவில் தோரண வாயிலும், திராவிட கட்டடக் கலை பிரதிபலிக்கும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நேரடி கண்காணிப்பில் சிற்பி கணபதி அவர்களைக் கொண்டு இரண்டு ஆண்டுகளில் “வள்ளுவர் கோட்டம்” அமைக்கப்பட்டு, சுற்றுலா தலமாக இருந்தது.

முந்தைய ஆட்சியாளர்களால், பராமரிக்கப்படாததால், சிதிலமடைந்து, பொலிவை இழந்து மோசமான நிலையில் இருந்ததை அறிந்த முதலமைச்சர் அவர்கள், வள்ளுவர் கோட்டத்தை புனரமைக்க ரூ.80 கோடி வழங்கி, 18.1.2024 அன்று பணிகள் துவங்கப்பட்டது.

தற்போது நடைபெற்று வரும் புனரமைப்பு மேம்பாட்டு பணிகளான, கலையரங்கம், குறள்மணி மாட கூரை புனரமைப்பு, தரைகள் புதுப்பித்தல், குறள் மணிமாட ஒலியம் சீரமைத்தல், வளாக சுற்றுச் சுவர் புதுப்பித்தல், தூண்கள், நுழைவாயில் பகுதிகளில் சிற்ப வேலைபாடுகள், மாற்றுத் திறனாளிகள் நடைபாதை, முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கு பிரத்தேயக மின் தூக்கி , பலநிலை வாகன நிறுத்து மிடம், உணவுக்கூடம், விற்பனை மையம், மழைநீர் வடிகால் வசதி, 2 இலட்சம் கொள்ளளவு நீர் சேமிப்பு தொட்டி அமைத்தல், பேவர் பிளாக் பாதை அமைத்தல், RO பிளான்ட் அமைத்தல், புல்வெளி அமைத்தல், செயற்கை நீரூற்று அமைத்தல், ஒளி ஒலி காட்சி அமைத்தல், சிதிலமடைந்த மின்சாதனங்கள், மின் இணைப்புகள் மாற்றுதல், கூட்ட அரங்கம் மற்றும் குறள்மணி மாடத்தில் குளிர்சாதன வசதி, தீ தடுப்பு வசதிகள், ஒலிபெருக்கி அமைப்பு நிறுவுதல், நுழைவாயில் புதுப்பித்தல் பணி, உயர் அழுத்த மின் வசதி, 250 கே.வி.ஏ. ஜெனரேட்டர், CCTV பொருத்துதல் ஆகியவற்றின் பணி முன்னேற்றத்தை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்.

**பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தல்!**

தோரணவாயில் முகப்பில், அழகு மிளிரச் செய்யும் ஸ்தபதிகளின் பணிகளை பார்வையிட்டு, துரிதமாக முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்திய பின், உணவகம், நிர்வாகக் கட்டடம், தள கற்கள் பதிக்கப்பட்டு வர்ணம் பூசும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், அப்பணிகளை எழிலுர செய்ய தக்க அறிவுரைகள் வழங்கினார்.

புனரமைக்கப்படும் இந்த வள்ளுவர் கோட்டத்தில், கலையரங்கம், VVIP போர்டிகோ, நீரூற்று, குறள் மணி மண்டபம் ஆகிய பணிகளை ஆய்வு செய்து, இப்பணிகளை 20.2.2025க்குள் விரைந்து முடிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

திருக்குறள் அவையரங்கம், சுற்றுச்சுவர், தெற்கு நுழைவு வாயில், புல்தரை அமைத்தல், தீ தடுப்பு வசதி, பெயர் பலகை, RO குடிநீர் வழங்கும் பணிகள் ஆகியவற்றை ஆய்வு செய்து மீதமுள்ள இப்பணிகளை 28.2.2025க்குள் விரைந்து முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

வள்ளுவர் கோட்டப் புனரமைப்புப் பணிகள் விரைவில் நிறைவுபெறும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த கள ஆய்வின்போது, பொதுப்பணித்துறை அரசுச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் எஸ்.மணிவண்ணன், சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் எஸ்.மணிகண்டன், கண்காணிப்புப் பொறியாளர் எஸ்.கார்த்திகேயன், செயற்பொறியாளர் ஜெய்கர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

# சென்னை கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் - பகுதிக் கழக செயலாளர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்கினார்!





*சென்னை, பிப்.18-*

ஒருங்கிணைந்த சென்னை மாவட்டத் திமுக சார்பில் தோழமைத் தலைவர்கள் பங்கேற்புடன் ஒன்றிய அரசை கண்டித்து நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் பகுதிக் கழகச் செயலாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் அமைச்சர் செயலாளர் பி.கே சேகர்பாபு ஆலோசனை வழங்கினார்.

ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசைக் கண்டித்து முதற்கட்டமாக தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் சென்னை, ஒன்றிய சுங்கத்துறை அலுவலகம் அருகில் 18/2/2025 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணி அளவில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வது குறித்து நேற்று (17.02.2025 - திங்கட்கிழமை) காலை 11.30 மணியளவில் சென்னை, ஓட்டேரி, எண்.7 செல்லப்பா தெரு என்ற முகவரியில் நடைபெற்ற அவசர ஆலோசனை கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்.

இந்த அவசர ஆலோசனை கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் ஆர்.பிரியாராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, மாநில நிர்வாகிகள்: கே.எஸ். இரவிச்சந்திரன், பி.கே. மூர்த்தி, எம் விஜயகுமார் எம்.சி, கூ.பி.ஜெயின் எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி. ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், எஸ். முரளி, வே. வாசு, எம்.சாமிக்கண்ணு, செ.தமிழ்வந்தன், எம்.டி.ஆர். நாகராஜ், டிஎஸ்பி.ராஜகோபால், வானவில் விஜய், எல். பி.எப்.மோகன், சுதா தீனதயாளன் எம்.சி, ராஜேஷ்வரி ஸ்ரீதர் எம்.சி, துரைகண்ணன், எம். பெரோஸ்கான், ஜி.வி.நாகவள்ளி, டாக்டர் சாந்தகுமாரி, மா.அசோக்குமார், இரா. வீரமணி, கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜ்முகமது, து.ஆயிரம், பி.விஜயகுமார், பா.பிரதீப் குமார், எல்.சம்பத் குமார், ஆர். எஸ்.சித்திக், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### தமிழ்நாட்டில் எப்போதுமே இரு மொழிக் கொள்கைதான்!

# ஒன்றிய கல்வி அமைச்சரின் கருத்து கண்டிக்கத்தக்கது!

## சென்னை கோபாலபுரத்தில் ரூ.7.79 கோடி மதிப்பிலான கலைஞர் நூற்றாண்டு குத்துச் சண்டை அகாடமி ஆய்வுக்குப் பின் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, பிப். 18 -**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.2.2025) சென்னை கோபாலபுரத்தில் ரூ.7.79 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கலைஞர் நூற்றாண்டு குத்துச் சண்டை அகாடமி, சென்னை சேப்பாக்கம் - திருவல்லிக்கேணியில் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சிறு விளையாட்டரங்கம் ஆகியவற்றின் கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

சென்னை கோபாலபுரத்தில் ரூ.7.79 கோடி மதிப்பீட்டில் கலைஞர் நூற்றாண்டு குத்துச் சண்டை அகாடமி கட்டப்பட்டு வருகின்றது. 890 நபர்கள் அமரும் வகையிலான பார்வையாளர் மாடத்துடன் கூடிய முற்றிலும் குளிரூட்டப்பட்ட உள்அரங்கம், பயிற்சி மைதானம், நிர்வாக அலுவலகம், பயிற்சியாளர் அறை, பயிற்சி செய்யும் பகுதி, மருத்துவர் அறை, உடற்பயிற்சிக் கூடம் ஆகிய வசதிகளுடன் கலைஞர் நூற்றாண்டு குத்துச் சண்டை அகாடமி கட்டப்பட்டு வருகின்றது.

**முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம்!**

சென்னை சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் 4.068 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டு வருகின்றது. சிறு விளையாட்ட ரங்கத்தின் பயிற்சிக் கூட கட்டடம் 396 சதுர மீட்டர் பரப்பளவில் வரவேற்பு பகுதி, ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித் தனியே உடைமாற்றும் அறைகள், கழிப்பறைகள், பொருட்கள் வைப்பறை, மேலாளர் அறை உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட்டு வருகின்றது. மேலும் சிறு விளையாட்டரங்கத்தில் திறந்த வெளி பார்வையாளர் மாடம் 265 நபர்கள் அமரும் வசதியுடன் கட்டப்பட்டு வருகின்றது.

இந்த பணிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று பார்வையிட்டு பணிகளை துரிதப்படுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அளித்த பேட்டி,

சென்னை கோபாலபுரத்தில் குத்துச் சண்டையில் மிகச் சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகள் நிறைய நபர்கள் உள்ளார்கள். அவர்கள் உலகத் தரத்திலான குத்துச் சண்டை அகாடமி அமைக்க வேண்டும் என்று அரசிற்கு ஒரு கோரிக்கை வைத்தார்கள். அவர்களுடைய திறனை கண்டறிந்து, மேம்படுத்த சென்னையின் மையப்பகுதியில் கோபாலபுரத்தில் ஒரு பாக்ஸிங் அகாடமி அமைக்கப்படும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள்.

அதனடிப்படையில் கலைஞருடைய நூற்றாண்டை முன்னிட்டு 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோபலபுரத்தில் சர்வதேச தரத்திலான பாக்ஸிங் அகாடமி அமைக்க முடிவு செய்யப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இதற்கான பணிகளை தொடங்கி வைத்தார்கள். தற்போது அந்த பணிகள் முடிவுற்று வருகின்ற 25 ந்தேதி முதலமைச்சர் அவர்கள் வருகை தந்து இந்த அகாடமியை திறந்து வைக்க உள்ளார்கள். இதனை முன்னிட்டு நானும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர், அரசு அலுவலர்கள் வந்து இந்த பணிகள் எந்தளவிற்கு சென்று கொண்டுள்ளன என்று ஆய்வு செய்தோம்.

இந்த அகாடமி நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.2 கோடி ஒதுக்கீடும், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன் அவர்களின் தொகுதி மேம்பட்டு நிதியிலிருந்து ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடும் பெற்று, அரசின் நிதி ஒதுக்கீடாக ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடும் பெற்று குத்துச் சண்டை அகாடமி கட்டப்பட்டு வருகின்றது.

பார்வையாளர் மாடம் 750 பேர் அமர்ந்து விளையாட்டை ரசிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் 2 பாக்ஸிங் ரிங் அமைய இருக்கின்றது. 2,500 சதுர அடி பரப்பளவில் இந்த மைதானம் அமைய இருக்கின்றது. மேலும் ஒரு உடற்பயிற்சிக் கூடம் மற்றும் குத்துச்சண்டை பயிற்சி ரிங்கும் அமைக்கப்பட இருக்கின்றது.

சென்னையில் இருந்து பல சர்வதேச பாக்ஸிங் வீரர், வீராங்கனைகளை உருவாக்க இந்த கலைஞர் நூற்றாண்டு குத்துச் சண்டை அகாடமி முழு அளவில் உபயோகமாக இருக்கும் என்று நம்புகின்றோம்.

**ஒன்றிய கல்வி அமச்சருக்கு கண்டனம்!**

**கேள்வி:** ஒன்றிய கல்வி அமைச்சர் ?

**பதில்:** ஒன்றிய கல்வித்துறை அமைச்சரின் கருத்து வன்மையாக கண்டிக்கத்தக்கது. நேற்று பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களும், துறை அலுவலர்களும் முழுமையாக விளக்கினார்கள். ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன், கல்வியில் மட்டுமல்ல, ஏற்கனவே ஒன்றிய அரசு அறிவித்த பட்ஜெட்டில் கூட ஒரு ரூபாய் கூட ஒதுக்கவில்லை. ஒரு திட்டத்தைக் கூட ஒதுக்கவில்லை. ஆனால் வரிசெலுத்திவிட்டு, ஒவ்வொரு மாநிலமும் நிதி கேட்பது அநியாயம் என்று வாய்க்கூசாமல் செல்லியுள்ளார்கள். இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. முதலமைச்சர் அவர்களும் இதை கண்டித்துள்ளார்கள்.

தமிழ்நாட்டில் எப்போதுமே இருமொழிக் கொள்கைதான். நாங்கள் எந்த காலத்திலும் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொள்ள மாட்டாம் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியுள்ளார்கள். எந்த வகையில் முயன்றாலும், எந்த நேரத்திலும், எந்த காலத்திலும், எந்த சூழ்நிலையிலும், தமிழக அரசு அனுமதிக்காது, தமிழ்நாட்டு மக்கள் அதை அனுமதிக்க மாட்டார்கள்.

**கேள்வி:** நாடு முழுக்க ஏற்றுக் கொண்டார்கள். தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் ஆகியவை மட்டும்தான் ஏற்றுக் கொள்ள வில்லை.........

**பதில்:** நாடு முழுக்க ஏற்றுக் கொண்டால், நாங்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவசியம் கிடையாது. இந்தியா என்பதே (வேற்றுமையில் ஒற்றுமை) UNITY IN DIVERSITY என்பது தான். பல்வேறு கலாச்சாரங்கள் ஒன்றிணைந்த ஒன்றியம்தான் இந்தியா என்பது. அதனால், ஒவ்வொரு மாநிலத்திற்கும், ஒரு அடையாளங்கள் உள்ளன. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு புரிதல் உள்ளது.

இந்தியாவிலேயே GER கிராஸ் எண்ரோல்மெண்ட் ரேசியோவில் நம்பர் ஒன் தமிழ்நாடு தான். இந்த சாதனை இரு மொழிக் கொள்கைதான். இருப்பதிலேயே டாப் டாக்டர்ஸ் எடுத்தால், சயின் டிஸ்ட் எடுத்துப் பார்த்தால் தமிழ்நாட்டில் அரசு பள்ளியில் தமிழ் வழியில் படித்துவிட்டு, இன்று உலகமெங்கும் சாதனை படைத்து வருகின்றார்கள். அதோடு இதை கம்பேர் செய்ய வேண்டாம்.

வன்மையாக கண்டிக்கின்றோம். நாங்கள் மும்மொழி கொள்கையை ஏற்றுக் கொள்ள மாட்டோம். தமிழ்நாட்டு மக்களும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா.எழிலன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.